பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 17 சனிக்கிழமை 05.10.2019 | கதிர் 334

### இது ரகசியம் அல்ல!

கோட்டாபயவின் கோட்டையில் நேற்று வெடிகொளுத்தி ஆரவாரம். நீதிமன்றத் தீர்ப்பு அப்படி வந்தால் அதுதான் நடக்கும் என எதிர்பார்த் தோம்.

ஆனாலும் இந்த மகிழ்ச்சி நிரந் தரமானது – குறைந்த பட்சம் நவம் பர் 16 வாக்களிப்

பக்கம் 02

# கோட்டாபயவுக்கு எதிரான மனு தள்ளுபடி! மேன்முறையீட்டு நீதிமன்று நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு, ஒக். 05

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷவின் இரட்டைப் பிரஜாவுரிமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர் இலங்கைப் பிரஜைதான் என்பதை உறுதி செய் தது .அதேநேரம் மனுவைத் தள்ளுபடி செய்தது. நீதிமன்றம் ஏகமனதாக இந்த முடிவை அறிவித்தது.

பக்கம் 03

## சுயேச்சையாகக் களத்தில் குதிக்க கட்டுப்பணம் செலுத்தினார் சமல்



கொழும்பு, ஒக். 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் சுயேச்சையாகப் போட்டி யிட நிதஹஸ் பொதுஜன சங் விதானாய என்ற பெயரில் நேற்று கட்டுப்பணம் செலுத்தி னார் முன்னாள் சபாநாயகரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின்

பக்கம் 03

## சகல தமிழ்க் கட்சிகளும் ஒரே மேசையில் கூடி ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஒருமித்த முடிவு

### வலியுறுத்துகின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 05

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்புக்கள் பொது வேட் பாளரை நிறுத்தவேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அது எவ்வளவு சாத்தியமென்

பக்கம் 03

## மக்களுக்கு கிடைத்த வெற்றி!

### மஹிந்த ராஜபக்ஷ கருத்து



கொழும்பு, ஒக். 05

கோட்டபாயவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய் யப்பட்டுள்ளமை நியாயத்திற்குக்

பக்கம் 03

# யாழ். கோட்டைக்குள் விகாரை அமைக்க இராணுவம் திட்டம்!

### எதிர்ப்பு வலுத்ததை அடுத்து பணிகள் இடைநிறுத்தம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணம் கோட்டையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்கு புதிதாக விகாரையொன்றை அமைப்பதற்கு இரகசியமாக நட வடிக்கை எடுத்துள்ளனர். ஆயி னும் அதற்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் வலுத்ததையடுத்து அந்தப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிய வருகின்றது.

பக்கம் 03

## நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னர் மஹிந்தவை சந்தித்த கோட்டா



கொழும்பு, ஒக். 05

பிரஜாவுரிமை தொடர்பான தனக்கெதிரான வழக்கு நீதிமன்றில் நிராகரிக்கப்

பக்கம் 03

## தமிழ் பேசும் முதல் வேட்பாளராக பஷீர்

கொழும்பு, ஒக். 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் முதல் வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

நவம்பர் 16 ஜனாதிபதித் தேர்

பக்கம் 03

## ஜனாதிபதித் தேர்தலுக்கு 450 கோடி ரூபா செலவு!

### வேட்பாளர்கள் கூடினால் அது மேலும் அதிகரிக்கும்

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதித் தேர்தலுக்கு 450 கோடி ரூபா செல வாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய செய்தி யாளர்களிடம் தெரிவித்தார்.

பக்கம் 03

## தேர்தலுக்கு தடை கோரிய மனுவை தள்ளுபடி செய்தது உயர் நீதிமன்றம்

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிசிறப்பு வர்த்த மானி வெளியீடு சட்டரீதியற்றது எனக் கட்டளையிடக் கோரி தாக் கல் செய்யப்பட்ட உறுதிகேள் நீதிப்பேரணை மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர் உயர்

பக்கம் 03

## சஜித் சார்பில் கட்டுப்பணம்

கொழும்பு, ஒக். 05

புதிய ஜனநாயக முன்னணி என்ற பெயரில் அன்னம் சின்னத்தில் போட்டியிடும் ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸவுக்கான கட்டுப் பணம் தேர்

பக்கம் 03

## எரிவாயு விலை குறைப்பு

கொழும்பு, ஒக். 05

சமையல் எரிவாயு வின் விலை நேற்று நள் ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக் கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய, இந்த விலை

பக்கம் 03

## மைத்திரி – பஸில் இன்று இறுதிக் கட்டச் சந்திப்பு

கொழும்பு, ஒக். 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ வுக்குமிடையில் இன்று முக்கி யத்துவமிக்க

பக்கம் 03

## மல்லாகம் விபத்தில் இளைஞன் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 05

லொறி – மோட்டார் சைக்கிள் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயி ரிழந்தார்.

கே.கே.எஸ். வீதி மல் லாகம் சந்திக்கு அருகா மையில் நேற்று மாலை 6.30

பக்கம் 03

# நீதிமன்றத் தீர்ப்பையடுத்து கேக் வெட்டி கொண்டாடிய பொதுஜன பெரமுனவினர்







முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கைப் பிரஜையாக ஏற்றுக்கொள்வதைத் தடுத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து, அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கோட்டாபய தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கேக் வெட்டி கொண்டாடி மகிழ்ந்தனர்.

# ஊடகவியலாளர் சோபிதனிடம் 2 1/2 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஒக். 05

தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் அந்தப் பத்திரிகையின் யாழ்.பிராந்தியச் செய்தியாளர் தி.சோபிதன் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு விசாரணைக்காக நேற்று அழைக்கப்பட்டார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு நேற்று விசாரணைக்கு சமூகமளிக்குமாறு ஊடகவியலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் டக்ளஸ், வரதர் தரப்புக்கள் இணைந்து தமிழ் மக்களை மேலும் நசுக்கக் கங்கணம் கட்டியுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத் தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தமை தொடர்பில் செய்தி வெளியாகியமை குறித்தே அவரிடம் நீண்ட நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

இதேவேளை, இந்த ஊடகவியலாளர. கடந்த 2 மாதமாக விபத்து ஒன்றில் சிக்கி நடக்க முடியாத நிலையில் இந்த விசாரணையை யாழ்ப்பாணத்துக்கு மாற்றித் தருமாறு பொலிஸ் தலைமையகத்திடம் கோரியபோதிலும் அது நிராகரிக்கப்பட்டது. விசாரணைத் திகதியில் மாற்றம் செய்யலாம். ஆனால் விசாரணைக்குக் கொழும்பு தலைமையகத்திற்கு வரவேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே இந்த ஊடகவியலாளர் விசாரணையை எதிர்கொண்டார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்று வரை நிரந்தரமானது – என்று கோட்டா தரப்பு மகிழலாமா என்றால் கேள்விக்குறிதான் விடை.

மூன்று நீதியரசர்களைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயம், கோட்டாபயவின் குடியுரிமைச்சான்றிதழின்செல்லுபடித் தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தித் தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்யும் தீர்ப்பை நேற்று மாலை 6 மணி அளவில் வழங்கியது. ஆனால், தீர்ப்புக்கான காரணங்கள், விளக்கங்கள் அளிக்கப்படவில்லை. அவை பின்னர் வழங்கப்படும் என நீதியரசர்கள் தெரிவித்துள்ளனர்.

இனி விவகாரம், அந்தத் தீர்ப்பில் அடங்கியுள்ள விடயங்களில்தான் தங்கியுள்ளது.

நேற்று மேற்படி மனு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டமையால், நாளை மறுதினம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை எந்தக் கட்டுப்பாடுகள், தடைகளுமின்றி கோட்டாபய தாக்கல் செய்யமுடியும். அவருக்கான தேர்தல் கட்டுப்பணம் பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் செலுத்தப்பட்டிருப்பதால் அவர் அந்தக் கட்சியின் மொட்டுச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும்.

எனினும், நாளை ஞாயிற்றுக் கிழமையன்றும் நண்பகல் 12 மணி வரை இத்தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட முடியும் என்பதால், வேறு கட்சி மற்றும் அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கும் கோட்டாபய பெயரில் பணம் புதிதாகச் செலுத்தப்பட இடமுண்டு என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

நாளை மறுதினம் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு நவம்பர் 16ஆம் திகதி வாக்களிப்பு நடைபெறுவதற்கு இடையில் –

நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்படி மனுவைத் தள்ளுபடி செய்து அளிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக உயர்நீதின்றத்தில் மேன்முறையீடு செய்யவும் –

அத்தகைய மேன்முறையீட்டை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பதுடன் கோட்டாபயவின் குடியுரிமைச் சான்றிதழுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை வழங்கவும் –

அத்தகைய தடை உத்தரவு காரணமாக வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னரும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை கோட்டாபயவுக்கு ஏற்படவும் –

இன்னும் கூட வாய்ப்புகள் உண்டு. அதற்கு சட்டத்தில் இடமுள்ளது. அந்தச் சாத்தியப்பாடு இருக்கின்றமையை மறுத்துவிட முடியாது.

அதனால்தான் கைகாவலுக்கு மாற்று வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை, பணம் செலுத்தி சுயேச்சையாகக் களமிறக்கும் வேலையை மொட்டுக்கட்சி முன்னெடுக்கின்றது.

ஆயினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பின் வாசகங்கள், விளக்கங்களை சட்ட அறிஞர்கள் பார்த்துப் படித்த பின்னர்தான் அந்தத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டுக்கான வாய்ப்பை – நிகழ்தகவை – கணிப்பிடலாம்.

எது, எப்படி என்றாலும் பொதுவாக ஒரு தேர்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு விட்டால், மிக மிக அத்தியாவசியமாகப் பட்டால் மட்டுமே அந்த நடவடிக்கையில் நீதிமன்றம் தலையிடுவது வழமை.

நீதிமன்றங்களின் இந்தப் பொதுவான நிலைப்பாடு இப்போதைக்கு கோட்டாபய ராஜபக்ஷவிற்குத் தெம்பையும், தைரியத்தையும் தரக்கூடியது என்பதும் மறுகற்பாலதல்ல.

நேற்றைய வழக்கின் மனுதாரர்கள் மேன்முறையீட்டுக்குப் போவார்களா, அதற்கான சாத்தியம் உண்டா என்பதை அதுபற்றிய தகவல் கிடைக்கும் போது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

★ ★ ★

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அனைத்துத் தமிழ்த் தேசியத் தரப்புகளையும் ஓரணியில் கொண்டு வருதல் என்ற பீடிகையுடன் தனது கைவரிசையைத் தொடங்கிய சுவாமிமார் அடங்கிய 'சுயாதீனக்குழு' இப்போது தன்னிச்சையாக பொது வேட்பாளர் என்ற பெயரில் ஒருவரைக் களத்தில் நிறுத்தி, தேர்தலில் பங்கெடுக்கும் அரசியல் கைங்கரியத்தில் முழு மூச்சாக நிற்கின்றது.

தமிழர்களின் அரசியல் கட்சிகள், அமைப்புகள், குழுக்களின் வரிசையில் இப்போது 'சுயாதீனக் குழு' என்ற இந்த அமைப்பும் ஓர் அங்கமாகி விட்டது. மற்றைய அரசியல் கட்சிகள், தரப்புகள், அமைப்புகளில் இருந்த இந்த 'சுயாதீனக் குழு' ஒன்றில்தான் வேறுபடுகின்றது.

'நாங்கள் பக்கச்சார்பற்றவர்கள், அரசியல்செய்ய வரவில்லை. தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்தி இனத்தின் மீட்சிக்காக ஏதோ ஆக்கபூர்வமாகச் செய்ய விழைக்கின்றோம்' – என்று 'சுயபுராணம்' கூறிக்கொண்டு அரசியல் செய்கின்றது.

அதாவது, அரசியல் செய்யவில்லை என்று கூறிக்கொண்டு அரசியல் செய்கின்றார்கள்.

இந்த ஜனாதிபதித் தேர்தலுக்குக் கட்டுப்பணம் செலுத்துவதற்கு இன்னும் மூன்று மணி நேர கால அவகாசம் உண்டு. நாளை காலை 9 மணி முதல் 12 மணிவரை தான் அது.

நாளை மறுதினம் காலையில் கொழும்பில் வேட்புமனுத் தாக்கல் செய்ய வேண்டும்.

அதற்கிடையில், தமிழ்த் தேசியத்தின் ஒட்டுமொத்த வேட்பாளர்' என்ற பெயரில் ஒருவரை சமூகத்தில் சலித்துத் தேடி, கடைசி நேரத்தில் களமிறக்கும் அரசியலில்' சுவாமிமார்கள், கல்விமான்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் விமர்சகர் போன்றோரைக் கொண்ட 'சுயாதீனக்குழு' என்ற பெயரில் செயற்படும் அரசியல் தரப்பு' கடைசி நேர படுபிஸியில்!

நடுநிலையோடு, எப்படியாவது இந்தத் தேர்தலை ஒட்டிய விடயத்தில் அனைத்துத் தமிழ் தரப்புகளையும் ஒரு மேசைக்குக் கொண்டு வரும் சமூகக் கடமையை முன்னின்று ஆற்றுவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட 'சுயாதீனக் குழு', தன்பாட்டில் 'அரசியல் தரப்பு' போல வேட்பாளர் தெரிவு, வேட்பாளரைக் களமிறக்குதல் என்ற அரசியல் கோதாவில் நேரடியாக இறங்கி விட்டமையாலோ என்னவோ, உண்மையில் இத்தகைய மதப் பெரியார்கள், சுவாமிமார்கள் கொண்ட குழு ஆற்ற வேண்டிய அந்த நடுநிலைப் பணியை ஆற்றும் பொறுப்பை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இப்போது தன் கையில் எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தத் தேர்தலை ஒட்டிய விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு செயற்படுவதை உறுதி செய்யும் நோக்கில் – போக்கில் – அது குறித்துக் கலந்துரையாடுவதற்காக இன்று இரவு 7 மணிக்கு ஒன்றியத்தில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு சமுகம் தரும்படி சகல தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் ஒன்றியம் அழைப்பு விடுத்திருப்பதாக அறியபடுகின்றது.

மதப்பெரியார்களைக்கொண்ட 'சுயாதீனக்குழு', சுயாதீனமாகப் பணி செய்வதை விடுத்து, தானே அரசியல் செய்யப் போய்விட்டமையால், பல்கலைக்கழக இளைஞர்கள் தமிழரின் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியை – இத்தேர்தலை ஒட்டிய விடயத்திலாவது ஒன்றித்துச் செயற்படச் செய்வதற்கான முயற்சியை – ஆரம்பித்திருக்கின்றது. நல்லது. வாழ்த்துக்கள்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு ஒரு நினைவூட்டல்.

தமிழ்த் தேசியத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தமிழ் கட்சிகளுக்கும் நீங்கள் கட்டாயம் அழைப்பு அனுப்பியிருப்பீர்கள்.

இப்போது புதிதாக 'சுயாதீனக் குழு' என்ற பெயரில் ஒரு தரப்பு தமிழர் அரசியல் பரப்பில் வேட்பாளரைத் தானே தெரிவு செய்து களமிறக்கும் அளவுக்கு அரசியல் செய்ய முன்வந்துள்ளது. அந்த 'அரசியல் கட்சிக்கும்' அழைப்பு விடுக்க மறந்து விடாதீர்கள்!

**- மின்னல் -**

# கோட்டாவுடன் குமாரவுக்கு தனிப்பட்ட பகைமையாம்!

கொழும்பு, ஒக். 05

குமார வெல்கம ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடத் தீர்மானித்துள்ளமை முற்றிலும் தவறான முடிவு என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அத்துடன் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்கவேண்டாம் என்று இவர் ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தாபய ராஜபக்ஷ உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் ஜனாதிபதியுடன் இணக்கமாகச் செயற்பட தொடங்கினார். இவருக்கும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் எவ்வித அரசியல் ரீதியிலான முரண்பாடுகளும் கிடையாது. தனிப்பட்ட பகைமையே காணப்படுகின்றது.

ஜனாதிபதித்தேர்தலில்சுயாதீனமாகப் போட்டியிட்டால் அவர் பாரிய பின்னடைவை எதிர்க்கொள்ள வேண்டும். இன்றும் காலம் கடக்கவில்லை. மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து ஐக்கிய தேசிய கட்சியினை வீழ்ச்சி பலமான அரசைத் தோற்றுவிக்க எவ்வித தடைகளும் ஏற்படுத்தப்படாது – என்றார். (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஒக். 05

யாழ்ப்பாணத்தில் இருந்து கேரளக் கஞ்சாவை எடுத்துச்சென்ற ஒருவர் நேற்று இரவு வவுனியா புதிய பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு கிலோ 855 கிராம் நிறையுடைய கஞ்சாப் பொதி கொழும்புக்கு கொண்டு செல்லப்படவிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது.

கேரளா கஞ்சாவை எடுத்து வந்த கொழும்பு கிரான்பாஸ் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கோட்டாபயவுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக் குடிமகனாக அங்கீகரிக்கப்படுவதைத் தடுத்து உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை நிறைவில் நேற்று மாலை இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பேராசிரியர் சந்திரகுப்த தேநுவர மற்றும் காமினி வியன்கொட ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட பலர் பெயரிடப்பட்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக் குடியுரிமை தொடர்பான முறையான சான்றிதழைச் சமர்ப்பிக்காமல் நாட்டில் கடவுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார் என்று மனுதாரர்கள் தெரிவித்தனர்.

அதன் காரணமாக குறித்த பத்திரங்களை இரத்துச் செய்யும் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறும் மற்றும் மனு விசாரணை நிறைவடையும் வரை அந்தப் பத்திரங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு ஒன்றை வெளியிடுமாறும் மனுதாரர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனை மூன்று நாட்கள் ஆராய்ந்த பின்னரே இந்தத் தீர்ப்பு நேற்று மாலை வழங்கப்பட்டுள்ளது.இதனால்ஏற்கனவே திட்டமிட்டபடி அவர் தேர்தலுக்கான வேட்புமனுவை எதிர்வரும் திங்கட்கிழமை தாக்கல் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## சுயேச்சையாகக்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சமல் ராஜபக்ஷ.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைப் பிரஜாவுரிமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு நேற்று மாலை 6 மணிக்கு வெளிவரவிருந்த நிலையில், அவரின் சகோதரரான சமல் நேற்று நண்பகல் இந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். (ஐ)

## மக்களுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிடைத்த வெற்றி என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இது மக்களின் வெற்றி. எங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு நீதிமன்று சரியான பதிலை கூறியுள்ளது. மக்களுக்கு இந்த உண்மை நிலை புரியும்.எத்தனை வழக்குகள் போட்டாலும் எமது பயணம் தொடரும் - என்றார். (ஐ)

## நீதிமன்றத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டதையடுத்து பொதுஜன பெரமுனவின் அரசியல் பிரமுகர்களையும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்தார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

இதன்போது கோட்டாபயவைக் கட்டித் தழுவி வரவேற்றார் எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்தராஜபக்ஷ.

இதன் பின்னர் அங்கிருந்த அரசியல் பிரமுகர்களும் கோட்டாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். (ஐ)

## சகல தமிழ்க்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பது தெரியவில்லை. தேர்தல் குறித்து தமிழர் தரப்பிலுள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரே மேசையில் இருந்து பொதுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகச் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சிலர் தமிழ்க் கட்சிகளுடன் பேசி வருகின்றனர். இதற்கமைய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்கினேஸ்வரன் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனுடனும் கலந்துரையாடியுள்ளனர். சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கும் மேல் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி இருப்பதாகவும் இதன்போது தங்களது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சகல தமிழ்க் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் சிவில் சமூகப் பிரதிநிதிகள் செயற்படுகின்றனர். அதிலும் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவது தொடர்பில்எம்முடனும்பேசியிருக்கின்றனர். அதே நேரம் அனைத்துத் தரப்பினரும் இணைந்து பொதுக்கோரிக்கைளை முன்வைத்துப் போட்டியிடும் வேட்பாளர்களுடன் பேசுவது தொடர்பிலும் ஆராய்ந்தோம்.

இதில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கால அவகாசம் முடிவடையும் நிலையில் இருக்கிறது. அதுவும் எதிர்வரும் திங்கட்கிழமை முடிவடைகிறது. ஆகையால் பொது வேட்பாளரை நிறுத்துவது எவ்வளவு சாத்தியம் என்பது கேள்வியாகத்தான் இருக்கிறது. ஆகவே இருக்கின்ற கால அவகாசத்தில் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு, காணி ஆக்கிரமிப்பு, சிங்கள பௌத்த மயமாக்கல் என்ற பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றுக்குத் தீர்வு காணப்படவேண்டியது மிக மிக அவசியமானது. ஆகையால் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்துப் போட்டியிடும் வேட்பாளர்களுடன் பேசவேண்டும்.

அதற்குச் சகல தமிழ்க் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். அவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரேமேசையிலிருந்து கலந்துரையாடி முடிவை எடுக்கவேண்டும். அவ்வாறு எடுக்கும் பொதுவான நிலைப்பாட்டை முன்வைத்து வேட்பாளர்களுடன் பேசி அதன் பின்னர் ஆதரிக்கலாமா இல்லையா என்பது குறித்து முடிவை எடுக்கலாம் என்பதைக் கூறியிருக்கின்றேன்.

தமிழர் தரப்புக்கள் ஒருமித்து பொதுவான நிலைப்பாட்டை உண்மையில் எடுக்கவேண்டுமாக இருந்தால் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரே மேசையில் இருந்து பேசுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அந்தக் குழுவினரிடம் கேட்டிருக்கின்றேன். - என்றார். (ஐ-07)

## எரிவாயு விலை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறைப்பு இடம்பெற்றுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ வீட்டு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நேற்று நள்ளிரவு முதல் 251 ரூபாவில் குறைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மல்லாகம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சௌந்தர்ராஜன் விதுசன் (வயது-19) என்ற இளைஞனே உயிரிழந்தார் என்று தெல்லிப்பளை வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இளைஞன் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி விபத்து இடம்பெற்றது. விபத்தில் இளைஞன் தலையில் படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்திலிருந்தவர்களால் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்லப்பட்டார்.

எனினும் அவர் உயிரிழந்தார் என்று தெல்லிப்பளை வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## ஜனாதிபதித்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
24 வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். வேட்பாளர் எண்ணிக்கை கூடினால் செலவும் கூடும். குரோத பேச்சுக்கள் மற்றும் பிரசாரங்கள் சமூக ஊடகங்களில் கட்டுப்படுத்தப்படும். முகநூல் மற்றும் யூரியூப் ஊடகங்களுடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தேர்தலுக்கு தடை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்றம் ஏற்கனவே தனது வியாக்கியானத்தைக் கூறியுள்ள நிலையில் இந்த மனு அடிப்படையற்றது எனத் தெரிவித்து நேற்று முற்பகல் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பைத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 18ஆம் திகதி வெளியிட்டது.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவிப்பை வெற்றும் வெறிதானதுமாக கட்டளையிடுமாறு கோரி நேற்று முன் தினம் உயர் நீதிமன்றில் நீதிப்பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாநகர முன்னாள் முதல்வர் என்.ஜி. மீத்சிறி டி சில்வா மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், எதிர் மனுதாரராகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடபட்டது. (ஐ)

# கோட்டா தரப்புச் சட்டத்தரணிகளின் செயலுக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஒக். 05

கோட்டாபயதரப்புச்சட்டத்தரணிகள் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நடந்துகொண்ட அருவருக்கத்தக்க செயற்பாடு தொடர்பில் மேன்முறையீட்டுநீதிமன்றின்தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட அதிருப்தி வெளியிட்டதுடன் கண்டித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கை குடிமகனாக ஏற்றுக் கொள்வதைத் தடுக்கும், உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கட்டளையை மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட தலைமையிலான, நீதியரசர்கள் அர்ஜுன் ஒபேசேகர, மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய குழாம் வழங்கியது.

கட்டளையை தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட அறிவித்தார்.

இந்த மன்று ஏகமனதாக ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளது. மனுதாரர் உரிய வகையில் எதிர் மனுதாரருக்கு அறிவித்தலைச் சேர்ப்பிக்கவில்லை. அதனால் இந்த மன்று மனுவைத் தள்ளுபடி செய்கின்றது என்று அவர் அறிவித்தார்.

அப்போது கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா உள்ளிட்டோர் கைகளைத் தட்டியதுடன் ஒருவர் மற்றவரின் கையைத் தட்டி கொண்டாடினர்.

அப்போது தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட மன்றின்



கட்டளை என சட்டத்தரணிகளை அமைதி பேணப் பணித்தார்.

தாம் அவ்வாறு நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்கின்றேன் என்று சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா மன்றிடம் மன்னிப்புக் கோரினார்.

இந்தச் செயற்பாடு கவலைக்குரியதும் அதிர்ச்சியானதும் வெறுக்கத் தக்கதுமாகும் என்று தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட தனது கரிசனையை வெளிப்படுத்தினார்.

நான் இதற்கு உடன்படுகின்றேன். அவமானப்படுகின்றேன் என்று சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா வருத்தம் தெரிவித்தார்.

நான் ஊகிக்கிறேன், எந்தவொரு சட்டத்தரணியும் வரவேற்கத்தகாத நடத்தையில் ஈடுபடமாட்டார்கள். அதற்கு ஏதேனும் ஆதாரம் இருந்தால், சட்டத்தரணிகள் சட் திட்டங்களை மதித்துச் செயற்படவேண்டும் என்று தலைமை நீதியரசர் யசந்த கோதாகொட, கோத்தாபயதரப்புச் சட்டத்தரணிகளின் இந்தச் செயற்பாட்டைக் கண்டித்தார்.

## மைத்திரி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

புதிய அரசியல் கூட்டணி, ஜனாதிபதித் தேர்தலுக்கான சின்னம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் நோக்கிலேயே இந்தச் சந்திப்பு நடைபெறுகின்றது என சுதந்திரக்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

மொட்டுச்சின்னத்தைக் கைவிட்டு விட்டு, பொதுச் சின்னத்தின்கீழ் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முன்வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ராஜபக்ஷாக்கள் அண்மையில் நிராகரித்துவிட்டனர்.

இந்நிலையில் சின்னம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 5 ஆம் திகதிவரை சுதந்திரக்கட்சி அவகாசம் வழங்கியது. இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பஸில் ராஜபக்ஷவுக்கும் கடிதம் அனுப்பினார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இன்று இரு கட்சிகளினதும் உயர்மட்டத் தலைவர்கள் சந்தித்துப்பேச்சு நடத்தவுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியசெயற்குழு இன்று இரவு கூடவுள்ளது. அதற்கு முன்னரே ஜனாதிபதி பஸிலுடன் பேச்சு நடத்துகிறார். இதன்போது எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தல் குறித்து சுதந்திரக்கட்சி இறுதி முடிவெடுக்கவுள்ளது. (ஐ)

## சஜித் சார்பில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தல்கள் செயலகத்தில் செலுத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களால் நேற்று முற்பகல் 11 மணிக்கு கொழும்பு தேர்தல் செயலகத்தில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இதன்மூலம் நவம்பர் 16 ஜனாதிபதித்தேர்தலுக்காக நேற்று வரை 24 வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## தமிழ் பேசும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலில் போட்டியிடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை மாலை வரை 34 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதில் தமிழ் பேசும் முதல் வேட்பாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் கட்டுப்பணத்தை நேற்றுத் தேர்தல் செயலகத்தில் செலுத்தினார். (ஐ)

## யாழ். கோட்டை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்களின் நிலங்களில் இருந்து இராணுவம் வெளியெற வேண்டுமாயின் கோட்டையைத் தமக்குத் தருமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

இதற்குக் கடும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனாலும் இராணுவம் கோட்டைக்குள் முகாம் அமைத்துத் தங்கியிருந்து வருகின்றது.

அங்குள்ள ஆலமரம் ஒன்றின் கீழ் கடந்த வருடம் புத்த விகாரை ஒன்றையும் இராணுவத்தினர் கட்டியுள்ளனர். அந்த விகாரையைப் பெரிதாக்குவதற்கு அவர்கள் தற்போது இரகசியமாக நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆனாலும் இந்த விடயம் பொதுமக்கள், அரசியல்வாதிகளுக்கு தெரியவந்த நிலையில் தற்போது கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-07)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அரைவேக்காட்டுத்தனம்

கழுதையின் வேலையைக் கழுதையும், நாயின் வேலையை நாயும் பார்க்க வேண்டும் என்பார்கள்.

கழுதையின் வேலையை நாய் செய்ய முடியாது. நாயின் வேலையைக் கழுதை செய்ய முடியாது. மாறிச் செய்தால் என்ன நடக்கும் என்பதும் நமக்குத் தெரிந்தது தான்.

நமது அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய வேலையை சில சுவாமிமார்களும் மற்றும் அதிகம் படித்த கல்விமான்களும், ஊடக ஜாம்பவான்களும் ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அதுவும், நீண்ட காலம் ஆராய்ந்து , பல தரப்புகளுடனும், பல சுற்றுக்கள் விரிவாகக் கலந்து பேசி, முடிவெடுக்க வேண்டிய விடயத்தை 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்ற பாணியில் – 'சுடுகுது மடியைப் பிடி' என்ற அவசரப் போக்கில் – அவர்கள் செய்ய முற்பட்டிருக்கின்றமை ஏதோ விபரீதத்துக்கான முன்னாயத்தம் போல படுகின்றது.

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி', இரண்டு மாதங்களாக ஆரவாரம் பண்ணி, ஆர்ப்பாட்டமாக ஏற்பாடுகள் செய்து, லட்சம் பேர் திரளுவர் என்று கருத்துக்கணிப்பு முடிவுகளை எல்லாம் தலைப்புச் செய்திகளாக வெளியிட்டு, கடைசியில் ஆக இரண்டாயிரத்து ஐந்நூறு பேரை 'எழுக தமிழின்' பெயரால் திரட்டியமை மறந்துவிடக் கூடிய பழைய விடயம் அல்ல. அண்மையில் நடந்துதான்.

அவ்வளவு ஆயத்தத்தோடு முன்னெடுத்த விடயமே பெரும் பின்னடைவைக் கண்டமைக்கான காரணங்களை நாம் தேடி வல்வந்தமாகக் கூறவேண்டியிருக்கின்றது.

இந்தச் சீத்துவத்தில் நமது அரசியல் கட்சிகளை விட்டு விட்டு சில சுவாமிமாரும், கல்விமான்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், ஊடக ஜாம்பவான்கள் என்று தம்மைத்தாமே கூறிக் கொள்வோரும் இணைந்து, ஓரிரு நாள் நடத்திய அவசர அவசரக் கூட்டங்களின் தொடராக, வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக ஒருவரைக் களம் இறக்கப் போகிறார்கள் எனக் கூறி, காரிய மாற்றுகின்றனர் என்று தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

'இன்ஸ்டன்ற் காப்பி' போல 'இன்ஸ்டன்ற் வேட்பாளர்' – அதுவும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தின் ஒட்டு மொத்த நிலைமையையும் பிரதிபலிக்கும் வேட்பாளர் என்ற பெயரில் ஒரு தயாரிப்பு வேலையை அவசர கதியில் செய்கின்றமை மிக அபத்தமான நடவடிக்கையாகும்.

தமிழர் தரப்பின் அரசியல் தலைமைகள் தென்னிலங்கைத் தரப்புகளுடன் இன்னும் உரையாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினதும், பொதுஜனபெரமுனவினதும் முடிவை அவை இன்னும் எதிர்பார்த்திருக்கின்றன.

இரு தரப்புகளுடனான பேச்சு முயற்சிகளை – இணக்க எத்தனங்களை – தமிழர் தரப்புகள் இன்னும் அடித்து மூடிவிடவில்லை.

அது மட்டுமல்லாமல். சரியோ,பிழையோ, தமிழர் தாயகத்தில், உரிய முறையில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தல்கள் , உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உண்மையான மக்கள் பிரதிநிதிகள் இன்னும் உள்ளனர்.

அவர்களை உதாசீனப்படுத்தி விட்டு, சமூகத்தில் ஒரு சிலர் தங்களுக்குள் சேர்ந்து – சமூகத்தில் அவர்களைப் போல தகுதியும், திறமையும், உரிமையும் இருக்கும் பலரையும் புறமொதுக்கிவிட்டு – தம்பாட்டில் முழு இனத்தின் பெயரிலும் காரியமாற்ற முற்படுவது ஒரு வகையில் அத்துமீறிய அடாவடித்தனமாகும்.

நம் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் அரசியல் சக்திகளை ஒன்றிணைத்து இனத்தின் எழுச்சியை ஒற்றுமைப்பட்டதாகக் காண்பிக்க முயல்வது என்பது வேறு விடயம்.

அதை விடுத்து, சமூகத்தில் ஒரு சிலர் – அதுவும் மக்கள் பிரதிநிதிகளாகத் தங்களைத் தாங்களே முன்னிறுத்தியபடி, இப்படி இனத்தின் தலையெழுத்தை தம்மிஷ்டப்படி எழுத முற்படுபவர்கள் போல, தான்தோன்றித்தனமாக நடப்பது, கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

நேற்றுமுன்தினம் சம்பந்தனையும் (சுமந்திரனைப் புறந்தள்ளி), கஜேந்திரகுமாரையும் சந்தித்தோம். நேற்று விக்னேஸ்வரனையும், சுரேஷ் பிறேமச்சந்திரனையும், ஐங்கரநேசனையும் சந்தித்தோம். ஆகவே நாளைக்குத் தமிழர் சார்பில் ஒருவரை நாமே தெரிவு செய்து தமிழர்களின் ஏக வேட்பாளர் என அறிவிக்கும் தகுதி எங்களுக்கு வந்துவிட்டது என அவர்கள் கருதுவார்களாயின் அது அரைவேக்காட்டுத் தனமன்றி வேறில்லை.

அவசரகதியில் அரசியல் நடத்தும் இத்தகைய அநாமதேயங்களின் எத்தனம் விபரீத விளைவுகளை ஏற்படுத்தாமல் இருந்தால் சரி.

# எழுத்தில் உறுதி தராவிட்டால் தமிழர்கள் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும்

கொழும்பு, ஒக்.05

பிரதான சிங்களக் கட்சிகள் தமிழர்களுடன் எழுத்து மூலமான உடன்பாட்டுக்கு வராவிட்டால், இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் முற்றிலுமாக பகிஷ்கரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

– இவ்வாறு தமிழ் கருத்துருவாக்கிகள் சார்பில் 'ஜனாதிபதித் தேர்தல் – 2020 தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?' – என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா, அரசியல் ஆய்வாளரும் யாழ். பல்கலைக்கழக அரசியல் பீடத் தலைவருமான கலாநிதி.கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் கூட்டாக நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிர்ஓபந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இதுதொடர்பில் முன்னணி அரசியல் கருத்துருவாக்கிகளான நாம், 30.09.2019 அன்று, விரிவாக ஆராய்ந்திருந்தோம். இந்தச் சந்திப்பில், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், ஆ.யதீந்திரா, சி.அ.யோதிலிங்கம், கலாநிதிகே.ரி.கனேசலிங்கம், பத்தி எழுத்தாளர் பொ.கருணாகரன், பத்தி எழுத்தாளர் கே.யோதிநாதன் (அக்கரையூரான்) ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் எவருமே, தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் கோரிக்கைகள் எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகக் குறைந்தது, அது தொடர்பில் பேசுவதற்குக் கூட அவர்கள் எவருமே தயாராக இல்லை. இந்தப் பின் புலத்தில் நோக்கினால், இரண்டு பிரதான வேட்பாளர்களுமே தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கருதுகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் வேறு வழியின்றி தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்னும் மேலாதிக்க மனோபாவமே அவர்களிடம் காணப்படுகின்றது. இவ்வாறான சூழலில் தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள தெரிவுகள் என்ன?

2009 இற்கு பின்னர் இடம்பெற்ற இரண்டு ஜனாதிபதி தேர்தல்களின் போதும்,தென்னிலங்கையின் அதிகார போட்டிகளுக்காகவும், அந்த அதிகார போட்டியில் தங்களது நலன்களை முதலீடு செய்திருந்த வெளிநாட்டு சக்திகளின் நலன்களுக்காகவும் தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்டன.

குறிப்பாக 2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் போது, தமிழ் மக்களின் வாக்குகள் தீர்மானகரமான பங்கை வகித்திருந்தன. ஆனாலும் சிங்கள -பௌத்த மேலாதிக்க மனோ நிலையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. தமிழர் தாயகப் பகுதியான வட-கிழக்கில் திட்டமிட்ட நிலஆக்கிரமிப்புக்களும் பௌத்த மயமாக்கலும் அப்படியே தொடர்கின்றன. இதற்கு திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றுத் தொடக்கம் அண்மையில் இடம்பெற்ற நீராவியடி பிள்ளையார் ஆலயப் பிரச்சினை வரை சான்று. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாதுகாக்கப்பட்ட ரணில் அரசாங்கமானது, எந்தவொரு கட்டத்திலும் தமிழ் மக்களுக்காக நிற்கவில்லை. மாறாக, சிங்கள – பௌத்த கட்டமைப்பைப் பாதுகாப்பதிலேயே கரிசனை கொண்டிருந்தது. இவையனைத்தும் எமக்கொரு தெளிவான செய்தியைச் சொல்லுகின்றன. அதாவது, தென்னிலங்கையில் எவர் ஜனாதிபதியானாலும் அல்லது எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் தமிழ் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படப் போவதில்லை. மாறாக, இரண்டு தரப்புக்களுமே அவர்களுக்குரிய அணுகு முறையில் தமிழர் தேசத்தின் சமூக –பொருளாதார – அரசியல் இருப்பை சிதைத்து, தமிழர் தாயகத்தில், தமிழ் மக்களை சிறுபான்மையாக்கும் வேலைத்திட்டத்தையே தொடர்வர். இவ்வாறான சூழலில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை கோரும் தகுதி எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் இல்லை.

அதேவேளை தமிழ் மக்களுக்கும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வேண்டிய எந்தவொரு கடப்பாடும் இல்லை.

2009இற்கு பின்னர் இடம்பெற்ற இரண்டு ஜனாதிபதிதேர்தல்களின் போதும், கூட்டமைப்பு தன்னிச்சையாகவே முடிவுகளை எடுத்திருந்தது. ஆனால் கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறைகள், தந்திரோபாயங்கள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில் இந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் கூட்டமைப்பு தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. கடந்த காலங்களில் கூட்டமைப்பின் தேர்தல் தந்திரோபாயங்கள் வெற்றி பெற்றிருந்தால் நாம் இவ்வாறானதொரு முடிவிற்கு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. எனவே இந்த நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதற்கு, நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டியிருக்கின்றது. தொடர்ந்தும் தமிழ் மக்களின் ஜனநாயக பலமானது, சிங்கள ஆளும் வர்க்கத்தின் அதிகாரப் போட்டிகளுக்காகவும், வெளிச் சக்திகளின் நலன்களுக்காகவும் தரைவார்க்கப்படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

தமிழர்கள் ஒரு தேசம் என்னும் வகையிலும், தமது பாரம்பரியத் தாயகமான வடக்கு கிழக்கில் தங்களைத் தாங்களே தீர்மானித்து வாழ்வதற்கான சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்னும் வகையிலும், இந்த ஜனாதிபதி தேர்தலைக் கையாள வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை நாம் இந்த இடத்தில் வலியுறுத்தி நிற்கின்றோம். அதற்கமைவாக, நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் வேட்பாளரை முன்நிறுத்தி, அனைத்துத் தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிப்பதன் ஊடாக நாம் ஒருதேசம் என்பதை நிரூபிக்கமுடியும். ஒருவேளை அதற்கான உடனடி சாத்தியப்பாடு இல்லையெனின் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதை தவிர்ப்பதே தமிழ் மக்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெளிவாக இருக்கமுடியும்.

2009 இற்குப் பின்னரான தமிழர் அரசியல் என்பது, முற்றிலும் சிங்கள தேசத்தின் நிகழ்சி நிரலுக்குள் சிக்குண்டு கிடக்கின்றது. தினமும் தமிழ்த் தேசிய அரசியல் திட்டமிட்டுச் சிதைக்கப்படுகின்றது. இதில் ஓர் உடனடியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்கு இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களின் நலனிலிருந்து கையாளுவது ஒன்றுதான் ஒரேயொரு வழியாகும். ஜனாதிபதித் தேர்தலின் போது மட்டுமதான், தமிழ் மக்களுக்கு அவ்வாறானதொரு பலமும் வாய்ப்பும் கிடைக்கின்றது. ஆனால் கடந்த இரண்டு தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் அதனைச் சரியாக பயன்படுத்தியிருக்கவில்லை. இதன் காரணமாகவே தமிழ் தேசிய அரசியலை ஒரு கட்டத்திற்கு மேல் நகர்த்த முடியாமல் இருக்கின்றது.

2005இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரித்ததன் மூலம், இலங்கைத் தீவினதும், இலங்கைத் தீவில் தலையீடு செய்து கொண்டிருந்த வெளிநாடுகளினதும் நிகழ்சி நிரல் முற்றிலுமாக குழப்பப்பட்டது. இதன் மூலம் இலங்கைத் தீவின் புவிசார் அரசியல் முற்றிலும் பிறிதொரு பரிணாமத்திற்கு செல்ல நேர்ந்தது. ஆனால் 2009இற்கு பின்னர் தமிழர்களின் அரசியல் தலைமையை பொறுப்பேற்றுக் கொண்ட, கூட்டமைப்பால், இலங்கையின் புவிசார் அரசியல் முரண்பாடுகளுக்குள்ளால் வெற்றிகரமாக பயணிக்க முடியவில்லை. முற்றிலும் சிங்க. நிகழ்சிநிரலுக்குள் கூட்டமைப்பு சிக்குண்டது. தமிழர்களின் அரசியல் பலமும் முற்றிலுமாக சிதைக்கப்பட்டது. இவ்வாறானதொரு சூழலில்தான் தமிழ் மக்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இதனை நாம் சரியாக பயன்படுத்துவதன் மூலம், மீண்டும் சிங்கள தேர்தல் வியூகங்களை குழப்பமுடியும். தமிழரின் அரசியலை முற்றிலும் தமிழரின் கைகளுக்குள் கொண்டு வர முடியும். எனவே தமிழ் மக்களாகிய நாம், ஜனாதிபதித் தேர்தலில், வழமையான பழக்கதோசத்தின் அடிப்படையில் வாக்களிக்காமல், சிந்தித்து செயற்படுமாறு வலியுறுத்துகின்றோம்.

ஒருவேளை கூட்டமைப்பு இதற்கு மாறாக, பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிக்கும் முடிவைஎடுக்குமாக இருந்தால், அந்த ஆதரவிற்கான நியாயங்கள் தமிழ் மக்களுக்கு முன்னால் வைக்கப்பட வேண்டும். பின்வரும் அடிப்படையிலான எழுத்து மூல உடன்பாடு ஒன்று செய்யப்படவேண்டும். எழுத்து மூலமான உடன்பாடு நிறைவேற்றப்படுமா அல்லது இல்லையா என்னும் வாதம் இங்கு தேவையற்றது. எழுத்து மூல உடன்பாடு என்பது ஒரு சமூக உடன்பாடாகும். அந்த உடன்பாட்டிற்குச் சிங்களதேசம் தயாராக இருக்கின்றதா என்பதுதான் இங்கு முக்கியமானது. அந்தவகையில், கூட்டமைப்பு ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாடு பின்வரும் விடயங்களை உட்கொண்டிருக்க வேண்டும்:-

* தமிழர் ஒரு தேசம் என்னும் வகையில்,அவர்களது பாரம்பரிய தாயகமான வடக்குக் கிழக்கில் சுயநிர்ணய உரிமையுடன கூடிய அரசியல் தீர்வொன்றிற்கு உரித்துடையவர்களாவர்.
* வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது அரசியல் தீர்வின் ஓர் அங்கமாக இருக்க வேண்டியது கட்டாயமான ஒன்று.
* இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றவை என நம்பப்படும், போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை.

– மேற்படி விடயங்களை உள்ளடக்கிய எழுத்து மூல உடன்பாடு ஒன்றைக் கூட்டமைப்பு மக்கள் முன்வைக்க வேண்டும். அதன பின்னரே, மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள வேண்டும். ஒருவேளை கூட்டமைப்பு இதில் தவறும் பட்சத்தில், இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் முற்றிலுமாக பகிஷ்கரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதே எமது அறிவுரையாகும்.

ஏனெனில் இவற்றைக் கோருவதற்கான சகல உரிமையும் தகுதியும் தமிழ் மக்களுக்குண்டு. தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைகளை நிராகரிக்கும் எந்தவொரு தேர்தலும் தமிழ் மக்களுக்கான தேர்தலாக இருக்கமுடியாது. – என்று

நாளை 06.10.2019 ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: அட்டமி பி.ப. 03.29 வரை இராகுகாலம் : 04.32 – 06.02
திதி : பூராடம் மு.இ. 07.59 வரை சுப நேரம் : 09.02 – 10.32

# குச்சவெளிக் கடலில் வெடிபொருள்கள்!

திருகோணமலை - குச்சவெளி கடலில் மிதந்து கொண்டிருந்த வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

கடற்படைப் பேச்சாளர் அலுவகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்போது கடலிலிருந்த மிதவையில் 4 டெட்டனேட்டர்களும் வெடிபொருள் 60 கிராமும் மீட்கப்பட்டுள்ளன எனக் கடற்படை அறிவித்துள்ளது.

சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களினால் இவை அந்தப் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இது தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஒரு கோடி ரூபா ஐஸ் போதைப்பொருளுடன் இந்தியக் குடிமகன் கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு, ஒக். 05

சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான 1.07 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இந்தியக் குடிமகன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை போதைத் தடுப்புப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

வியாபார நோக்கத்துக்காக எடுத்துவரப்பட்ட புடவைகளுக்குள் 1.07 கிலோ ஐஸ் போதைப்பொருளை மறைத்து வைத்து கடத்த முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டார். 53 வயதுடைய இந்தியக் குடிமகனே இவ்வாறு கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் அவர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மஹிந்தவை நேரடி விவாதத்துக்கு அழைக்கிறார் அமைச்சர் மங்கள!



கொழும்பு, ஒக். 05

நாட்டின் நிதி நிலைவரம் குறித்து நேரடி விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த அரசால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் அனைத்தும் பயனற்றவை எனவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தங்களின் அதிகாரத்தையும், ஆட்சிப் பெருமைகளையும் தக்கவைத்துக் கொள்வதற்காகவே, பாரிய நிதி செலவிடப்பட்டு கடந்த அரசால் சில அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட அபிவிருத்திகள் ஏதும் தேசிய வருமானத்தை ஈட்டும் விதமாக அமையவில்லை எனவும் நிதியமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசுக்கு எதிராக தொடர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் மஹிந்த நாட்டின் நிதி நிலவரம் குறித்து நேரடி விவாதத்திற்கு வரத் தயாரா எனவும் மங்கள சமரவீர கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)

# வேறு சின்னத்தை சட்டம் தடுக்கிறது

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ மொட்டுச் சின்னத்தை தவிர வேறு சின்னத்தில் போட்டியிடுவதில் சட்ட ரீதியான தடைகள் உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெப்பிலியான சுமேத்திரதேவி பிரிவேனாவில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

கோட்டாபயராஜபக்ஷவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகள் அனைத்தும் தோல்வியடைய வேண்டும் எனவும், நாட்டுக்கு ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் எனவும் இதன் போது பிரார்த்தனை செய்யப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் எதிர்க் கட்சித் தலைவரும் பங்கேற்றிருந்தார். கோட்டாபய தவிர்ந்த மற்றுமொரு ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இதுவரை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை என தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ, நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படும் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் செயலகங்களில் பரப்புரைகளுக்குத் தடை

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், எதிர்க் கட்சித் தலைவர் செயலகம் ஆகியவற்றை, ஜனாதிபதி வேட்பாளர்களின் பரப்புரைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தடை விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஊக்கமளிக்கும் செயற்பாடுகளுக்கு இந்த மூன்று செயலகங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

வேட்புமனுக்கள் வரும் 7ஆம் திகதி ஏற்றுக் கொள்வதற்கிடையில், அனைத்து வேட்பாளர்களினதும் பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் அகற்றப்பட வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# விசேட ஊடக நிலையம் தேர்தலுக்காக அமைப்பு

கொழும்பு, ஒக். 05

ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஊடகங்களை ஒன்றிணைப்பதற்கான விசேட நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவில் அரச தகவல் திணைக்களத்தினால் இந்த விசேட நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரப்பூர்வ அறிவிப்புக்கள், காணொளிப் பதிவுகள், ஒலிப் பதிவுகள் போன்றவற்றை ஊடகங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# அமைச்சர் ஹக்கீமை சந்தித்து பேசினார் ஈரானியத் தூதுவர்

கொழும்பு, ஒக். 05

இலங்கைக்கான ஈரானிய இஸ்லாமிய குடியரசின் தூதுவர் முஹம்மத் ஸய்ரி அமிரானிக்கும், அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அலுவலகத்தில் கடந்த கடந்த புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது நீர் வழங்கல், நிர்ப்பாசனச் செயற்திட்டங்கள் மற்றும் உயர்கல்வி குறித்து ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வெகுவிரைவில் சஜித்துடன் கைகோர்க்கிறார் ஆறுமுகன்!



கொழும்பு, ஒக். 05

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரைவில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவைப் பகிரங்கமாக அறிவிக்கவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. விரைவில் இரண்டு தரப்பும் கூட்டாக இதற்கான அறிவிப்பை விடுக்கலாமெனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பதென அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவும், ஐ.தே.கவை ஆதரிக்கும் முடிவையே பரிந்துரைத்திருந்தது. இதையடுத்து நவீன் திஸாநாயக்க ஊடாக, ஐ.தே.க தலைமைக்கு இ.தொ.கா. தூது விட்டிருந்தது. எனினும், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஐ.தே.முன்னணியில் வலுவான அணியாக இருப்பதால் இதுவரை இ.தொ.காவின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காமலிருந்தது.

அண்மையில் மங்கள சமரவீரவுடன், இ.தொ.க திட்டமிட்டிருந்த கலந்துரையாடல் இறுதிநேரத்தில் இரத்தாகியிருந்தது.

இந்த நிலையில், இ.தொ.க விரைவில் ஐ.தே.க தலைமையிலான கூட்டணிக்குள் நுழையும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சம்மதத்தின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் வருமென எதிர்பார்க்கப்படும் நிலையில், ஐ.தே.க. கூட்டணியில் தொடர்ந்தால் மாத்திரமே வெற்றியடைய முடியுமென கருதுவதாலேயே, விடாப்பிடியாக ஐ.தே.க கூட்டணிக்குள் நுழைகிறது இ.தொ.கா.

(மேலும் செய்திகள் படங்கள் 13 ஆம் பக்கத்தில்)

# அமெ. - சீனா வர்த்தகப் போரால் இந்தியா நன்மை அடைய முடியும்

## அமெரிக்கத் தரப்பில் பகிரங்கமாகத் தெரிவிப்பு




அமெரிக்கா சீனா இடையேயான வர்த்தகப் போரை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு இந்தியா நன்மை அடைய முடியும் என அமெரிக்க வர்த்தகத்துறை செயலர் வில்பர் ராஸ் கூறியுள்ளார்.

உலகப் பொருளாதாரப் பொதுமன்றத்தின், வர்த்தகம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அமெரிக்க வர்த்தகத்துறை செயலர் வில்பர் ராஸ், வர்த்தகம் தொடர்பாகப் பிற பகுதிகளில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளும் மிகச் சிறந்த வாய்ப்பை இந்தியா பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்திய வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயலை சந்தித்த போது, சீனா அமெரிக்காவிற்கு எவ்வளவு ஏற்றுமதி செய்கிறது, இந்தியா எவ்வளவு ஏற்றுமதி செய்கிறது, இந்த நிலையை மாற்றியமைப்பது மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது எனவும் அவர் கூறினார்.

இந்தியா, அமெரிக்கா இருநாடுகளும் விரைவாக வர்த்தக ஒப்பந்தத்தை எட்டும் முயற்சிகளில் இருக்கின்றன எனவும் வில்பர் ராஸ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், வர்த்தக முன்னுரிமை அந்தஸ்து பெற இந்தியா தகுதியான நாடு என அமெரிக்கா கருதவில்லை எனக் குறிப்பிட்டார். இருப்பினும், இந்தியாவிற்கு வர்த்தக முன்னுரிமை அந்தஸ்து விவகாரத்திலும் பேச்சு நடைபெற்று வருவதாக வில்பர் ராஸ் கூறினார்.

# சிறுமிக்கு கொடுத்த மாத்திரையில் கம்பி

சேலம்,ஒக்.05

சேலம் அருகே காய்ச்சல் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கொடுத்த மாத்திரையில் கம்பி இருந்தது தொடர்பாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் சங்ககிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மோரூர் மேற்கு கிராமம் தேவேந்திர தெருவைச் சேர்ந்தவர் கோபால கிருஷ்ணன் மகாநிறா (வயது 6). இவருக்கு கடந்த



சில நாள்களாகக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது. இதையடுத்து அருகில் உள்ள புள்ளிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அங்கு பணியில் இருந்த வைத்தியர் தனசேகரன் சிறுமியைப் பரிசோதித்து மருந்து, மாத்திரைகளை வழங்கினார்.

வைத்தியசாலையில் வழங்கிய மாத்திரையை பாதியாக உடைத்து சிறுமிக்கு கொடுக்க முயன்றனர். அப்போது மாத்திரையில் கம்பி இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

மேலும் ஊர்மக்கள் 20 பேருடன் சேர்ந்து ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டார். சங்ககிரி பொலிஸார் அவர்களை சமாதானப்படுத்தினர்.

மேலும் மாத்திரையை தயாரித்து வழங்கிய நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தனர். இதை யடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.

இந்த நிலையில் சேலம் மாவட்ட சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று விசாரணை நடத்தப்பட்டது. மேலும் அந்த மாத்திரைகளை தயாரித்து வழங்கிய மருந்து நிறுவனம் குறித்தும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

விசாரணை முடிவில் அந்த மருந்து நிறுவனம் மீது கடும் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

# ஹிந்தி - சிறிய குழந்தை; கமல்ஹாசன் கூறுகிறார்

சென்னை,ஒக்.05

ஹிந்தி மொழி சிறிய குழந்தை. சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கை ஒப்பிடும்போது, இந்தி மொழி இன்னும் இளைய மொழிதான் என்று கமல்ஹாசன் கூறினார்.

மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் 500 மாணவிகளுக்கு மாதவிடாய் கால பெட்டகங்களை வழங்கும் நிகழ்ச்சி கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சி தலைவர் கமல்ஹாசன் கலந்துகொண்டு மாணவிகளுக்குப் பெட்டகங்களை வழங்கினார்.

பின்னர் அவர் அளித்த பேட்டியில் ஹிந்தி திணிப்பு பற்றி கூறியவை வருமாறு:-

'தமிழ், சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கை ஒப்பிடும்போது, ஹிந்தி மொழி இன்னும் இளைய மொழிதான். இதை நான் ஏளனமாக கூறவில்லை. அதையும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும் என்கிற அக்கறையில் சொல்கிறேன். அதற்காக அதை திணிக்கக்கூடாது.' இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த செப்ரெம்பர் 16 ஆம் திகதி ஹிந்தி மொழி திணிப்பு குறித்து கமல்ஹாசன் ஒரு வீடியோ வெளியிட்டார். அதில், 'இந்தி மொழியைத் திணித்தால், ஜல்லிக்கட்டு போராட்டத்தை விட பல மடங்கு பெரிதான போராட்டம் நடைபெறும்' என்று பேசியிருந்தார்.

# பாக். பெண்ணுக்கு 35 ஆண்டுகள் கழித்து இந்திய குடியுரிமை

உத்தர பிரதேசத்தில், நீண்ட கால விசாவில் தங்கி இருந்த பாகிஸ்தான் பெண் ஒருவருக்கு 35 ஆண்டுகள் கழித்து இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசம் மாநிலம் முசாபர் நகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சையது முகம்மது. இவர் 1984 ஆம் ஆண்டு பாகிஸ்தானை சேர்ந்த பெண்ணான சுபேதா என்பவரை திருமணம் செய்தார். திருமணம் முடிந்த நிலையில் உடனடியாக இந்திய குடியுரிமைக்கு சுபேதா விண்ணப்பித்துள்ளார். ஆனால் அப்போதைய சட்டங்கள் மற்றும் சில அரசியல் காரணங்களால் அவரது விண்ணப்பம் மறுக்கப்பட்டது.

அதன் பிறகு அவர் விசாவை மீண்டும் மீண்டும் புதுப்பித்து நீண்ட கால விசாவில் இந்தியாவில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் 4 தினங்களுக்கு முன்பு அவருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இனி அவர் இந்தியக் குடிமகளுக்கான, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் வேண்டி விண்ணப்பிக்கலாம்.

குடியுரிமை வழங்கப்பட்ட சுபேதாவிற்கு வயது 55. அவருக்கு இரு மகள்கள் உள்ளனர். இந்திய குடிமகன்களை மணந்த சுமார் 25 பாகிஸ்தான் பெண்கள் முசாபர்நகர் மாவட்டத்தில் நீண்ட கால விசாவில் வசித்து வருகின்றனர் என அரசு தரப்பு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

# பீகாரில் படகு கவிழ்ந்தில் 3 பேர் பலி: 20 பேர் மாயம்



கத்திகார்,ஒக்.05

பீகார் மாநிலம் கத்திகார் மாவட்டத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 20 பேரைக் காணவில்லை.

கத்திகார் மாவட்டம் வஜித்பூர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், அண்டை மாநிலமான மேற்கு வங்காள மாநிலத்தின் ராம்பூர் ஹாட் பகுதியில் பொருள்கள் வாங்கிவிட்டு நேற்றுமுன்தினம் இரவு ஊர் திரும்பினர்.

அவர்கள் படகு மூலம் மகாநந்தா ஆற்றைக் கடந்து சென்றனர். சுமார் 80 பேருடன் சென்ற அந்த படகு, திடீரென நிலை குலைந்து ஆற்றில் கவிழ்ந்தது.

படகில் இருந்தவர்கள் தண்ணீரில் விழுந்து தத்தளித்தனர். சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர். விபத்தை நேரில் பார்த்தவர்கள் ஆற்றில் குதித்து சிலரைக் காப்பாற்றினர்.

விபத்து குறித்துத் தகவல் அந்த பேரிடர் மீட்பு படையின் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். ஆற்றில் விழுந்து தத்தளித்த பாரதீய ஜனதாக் கட்சி எம்.பி. ராம்கிரிபால் யாதவ் உள்ளிட்ட சிலரை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

3 பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர். மேலும் 20 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணி நடைபெறுகிறது.

(உ)



# ஈராக்கில் மக்கள் போராட்டத்தில் வன்முறை 26 பேர் உயிரிழப்பு; 800 பேர் வரை காயம்



ஈராக்கில் அரசுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியதில் பலியானவர்கள் எண்ணிக்கை 26 ஆக உயர்ந்துள்ளது.

வேலை வாய்ப்பின்மை, ஊழல், பொருளாதார சரிவு, அரசு நிர்வாக மந்த செயல்பாடு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை முன்வைத்து ஈராக்கில் போராட்டம் வெடித்துள்ளது.

பாக்தாத், பாஸ்ரா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் போராட்டம் பரவி வருகிறது. பாக்தாத்தில் போராட்டக்காரர்கள் நடனமாடியும் முழக்கங்களை எழுப்பியும் வன்முறையில் ஈடுபட்டனர்

பாக்தாத்தில் வன்முறையில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பொதுச்சொத்துகள், வாகனங்களுக்கு தீவைத்தனர். சாலைகளில் கார் டயர்கள் கொளுத்தப்பட்டன

போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் கடும் மோதல் வெடித்தது. அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் கொல்லப்பட்டனர். 800 இற்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். இதில் பாதுகாப்பு படையினர் 180 பேரும் படுகாயமுற்றனர்.

# உக்ரைனுக்கு அமெரிக்காவின் 150 ஏவுகணைகள் கிடைக்கும்

எதிரி நாட்டு போர் விமானங்களைத் தாக்கி அழிக்கக் கூடிய அதி நவீன 150 ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

தங்களது நாட்டின் பாதுகாப்புக்கான ஏவுகணைகளை அமெரிக்காவிடமிருந்து பெறுவது தொடர்பாக உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் முன்னதாகப் பேச்சு நடத்திவந்தார்.



பேச்சில் உடன்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், சுமார் 280 கோடி (இந்திய) ரூபா மதிப்பிலான ஏவுகணைகள் மற்றும் உபகரணங்களை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா தற்போது சம்மதித்துள்ளது.

அந்த வகையில், எதிரி நாட்டு போர் விமானங்களைத் தாக்கி அழிக்கக்கூடிய 150 ஜாவலின் ஏவுகணைகள் மற்றும் உபகரணங்கள் உக்ரைனுக்கு வழங்கப்படவுள்ளன.

இதுகுறித்து தெரிவித்துள்ள அமெரிக்கா, உக்ரைனுக்கு ஏவுகணைகள் வழங்கி அந்நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலம், இருநாடுகளுக்கு இடையிலான வெளியுறவுக் கொள்கை மேம்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

# பாரிஸ் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் 4 அதிகாரிகள் கத்தியால் குத்திக்கொலை



பாரிஸ், ஒக்.05

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள பொலிஸ் தலைமை அலுவலகத்தில் 4 அதிகாரிகள் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டனர்.

பாரிஸின் மத்திய பகுதியில் பொலிஸ் தலைமையகம் அமைந்துள்ளது. இந்த அலுவலகத்தில் நிர்வாகப் பணியில் கடமையாற்றி வந்த நபர் ஒருவர் திடீரென, தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் அதிகாரிகளைத் தாக்கினார். இதில் படுகாயம் அடைந்த 4 அதிகாரிகள் நிகழ்விடத்திலேயே இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தனர்.

துரிதமாக செயல்பட்ட பொலிஸார், கத்தியால் தாக்குதல் நடத்திய நபரை சுட்டுக்கொன்றனர். இச்சம்பவம் பற்றி அந்நாட்டு பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். முதல் கட்ட தகவலின்படி, பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக இந்தச் சம்பவம் நடைபெற்று இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# மெக்ஸிக்கோவில் வன்முறை வெடித்தது மாணவர்கள் நினைவு தினப் பேரணியில்!

மெக்ஸிக்கோவில், ஜனநாயகத் திற்காகப் போராடிய மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட 51ஆம் ஆண்டு நினைவு தினப் பேரணியில் வன்முறை வெடித்தது.



மெக்ஸிக்கோவில், 1968 ஆம் ஆண்டு, ஒக்ரோபர் 2 ஆம் திகதி ஜனநாயக சீர்திருத்தத்தை வலியுறுத்தி பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று திரண்டு போராட்டங்களை நடத்தினர்.

அப்போது, ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் நடைபெற இருந்த நிலையில், மாணவர்களின் தொடர் போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், லாதேலோல்கோ சதுக்கம் அருகே சுமார் 100 பேர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த படுகொலையில் உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் கடந்த புதனன்று மாணவர் படுகொலை நினைவுதினத்தையொட்டி பல்வேறு இடங்களில் திரண்ட மக்கள் பதாகைகளுடன் சோகாலோ சதுக்கம் நோக்கி பேரணி நடத்தினர்.

இந்தநிலையில், குறிப்பிட்ட சில தெருக்கள் வழியாக செல்லக் காவல் துறையினர் தடைவிதிக்கவே, ஆத்திரமடைந்த மக்கள் சாலையோரம் இருந்த பொதுச்சொத்துக்களை உடைத்துச் சேதப்படுத்தினர். அப்போது பெரும் வன்முறை வெடித்தது.

# சுமார் 86 கோடி ரூபாவுக்கு ஏலம் போன பிரிட்டிஷ் நாடாளுமன்றக் கட்டட ஓவியம்

இங்கிலாந்தில் பிரபல ஓவியரான பேங்க்சி வரைந்த பிரிட்டன் நாடாளுமன்றக் கட்டட ஓவியம், இந்தியப் பணப் பெறுமதியில் சுமார் 86 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

இங்கிலாந்தில் பேங்க்சி என்ற ஓவியரின் ஓவியங்கள் மிகவும் பிரபலமானவை.



2009 ஆம் ஆண்டு அவர் வரைந்த ஓவியம் ஒன்று, தற்போது இங்கிலாந்தில் உள்ள சோதிபை என்ற ஏல நிலையத்தில் ஏலத்திற்கு விடப்பட்டது.

பிரிட்டன் நாடாளுமன்ற கட்டடத்தைப் பிரதிபலிப்பது போல் அமைக்கப்பட்ட அந்த ஓவியத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதிலாக ஏராளமான சிம்பன்ஸிகள் அவையில் அமர்ந்திருப்பது போல சித்திரிக்கப்பட்டிருந்தது.

4 மீற்றர் அளவு அகலத்தில் அமைந்த இந்த சுமார் 13 கோடி ரூபாய் வரைக்கும் ஏலம் போகும் எனக் கணிக்கப்பட்டிருந்த நிலையில், பலரும் இந்த ஓவியத்தை வாங்க போட்டி போட்டனர்.

இறுதியில் சுமார் 86 கோடி ரூபாய்க்கு இந்த ஓவியம் ஏலத்தில் எடுக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு பேங்க்சி வரைந்த கீப் இட் ஸ்பாட்லெஸ் எனும் ஓவியம் சுமார் 13 கோடி ரூபாய்க்கு ஏலம் போனதே அவரது ஓவியங்களின் முந்தைய சாதனையாக இருந்தது. தற்போது இந்த ஓவியம் ரூபா 86 கோடிக்கு ஏலம் போனதால் இதுவே பேங்க்சின் ஓவியங்களிலேயே அதிக தொகைக்கு ஏலம் போன ஓவியமாகக் கூறப்படுகிறது.


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகம். ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்04, சிவகுல வீதி, ஆதன இலக்கம் 14/4, 14/5என்ற இலக்கத்தை கொண்டதும் கதிரை நிலப்பரப்புபரப்பு 08 குளி 03.05 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு : J/263, கோப்பாய் கோவில் பற்று உரும்பிராய் மேற்கு இறை, உரும்பிராயில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் திரு.க.சரவணைஎன ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தினை சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராயை சேர்ந்த சரவணை சீவரத்தினம் (421410445V)என்பவர்,நிலப்பரப்பு 08 குளி 03.05 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு திரு.இ.நடேசன் அவர்களால் எழுதப்பட்ட 2633 ஆம் இலக்க 04.07.2016 ஆம் திகதிய காணி வெளிப்படுத்தல் உறுதி மூலம் சரவணை சீவரத்தினத்திற்கு தடையற்ற ஆட்சியுமானதென கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு பரப்பு 08 குழி 03.05 இற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் இராசம்மாவிற்கும், யோகராஜன் பெண் புஸ்பதேவிக்கும், மகேஸ்வரன் பெண் புஸ்பதேவிக்கும் உரிய ஆதனங்களாகும். எல்லை வடக்கு சின்னத்துரை பெண் பூமணிக்கும் மறு பெயருக்கும்உரிய ஆதனம், மேற்கு நிலம் வைரமுத்து யோகநாதனிற்கும், அன்னலிங்கம் பெண் கனகாம்பிகைக்கும்உரிய ஆதனமும், தெற்கு நிலம் போக்குவரத்து பாதைக்குரிய ஆதனமுமாகும். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.கே. சிவானந்தன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 4204 ஆம் இலக்க, 17.12.2009 ஆம் திகதிய வரைபடத்தில் என குறித்து காட்டப்பட்டுள்ளது.


இவ் ஆதனத்தை சரவணை சீவரத்தினத்தினம் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 03.11.2019 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சரவணை சீவரத்தினத்தினம் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை
புத்தூர்

# எதிர்காலத் தலைமுறைக்கு வைரம் பாய்ச்சும்

# ஆசிரிய பெருந்தகைகள்

**ஒக்ரோபர் 05 உலக ஆசிரியர் தினமாகும்**



மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறார்கள். வேறு எந்த பணிக்கும் கிடைக்காத பெருமை ஆசிரியர்களுக்கு உள்ளது என்பதற்கு இந்த பழமொழியே சாட்சியாக உள்ளது.

வெறும் மாணவர்களாக பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்கு ஒழுக்கம், நல்ல பழக்கவழக்கம், படிப்பு என அறிவுக் கண்ணைத் திறந்து வைத்து அவர்களை சாதனையாளர்களாக்குவது ஆசிரியர்களே.

அவர்களைக் கொண்டாடும் நாள்தான் ஆசிரியர் தினநன்நாள்.

எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு என்ற பொன்மொழிக்கு எடுத்துக் காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களை வாழ்க்கை என்றால் என்ன, இதில் மாணவ, மாணவி சமூகத் தின் பங்கு எப்படி இருக்கவேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள்தான் கற்றுக் கொடுக்கின்றனர்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை முகவரி இல்லாத கடிதத்திற்குச் சமம். இது போல்தான் மாணவ சமூகமும் குறிக்கோள், லட்சியம் இல்லாமல் இருந்தால் எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை ஆரம்ப காலத்தில் இருந்தே மாணவ மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியைப் பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் ஓர் மகிழ்ச்சி தோன்றும். இதனைச் சொல்வதை விட உணர்வுப்பூர்வமாக உணர முடியும். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது.

அதே போல் ஆசிரியர்கள் என்பவர்கள் மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்லர். மாறாக உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியரின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் அவை மனதில் அப்படியே பதியும். அதனால் ஆசிரியர்கள் தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண் ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர். அப்படி பணி யாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்திற்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர்.

தேசத்தின் வளமான எதிர்காலத்தைத் தாங்க விருக்கும் தூண்களுக்கு வைரம் பாய்ச்சு கின்றவர்களும் அவர்களே. நமக்காகத் தம்மை அர்ப்பணித்த இவர்கள் எமது மனதளவு நன்றிக்கும், செயலளவு மரியாதைக்கும் உரித்துடையவர்களே.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு. என்பதனை திருக்குறளின் முதல் கவிதையாக அமைத்துள்ளார் வள்ளுவர். எழுத் தறிவித்தவன் இறைவன் ஆகும் என ஆத்திசூடியில் பாடுகின்றாள் ஔவை.

இவ்வாறாக மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற ஆசிரியரை கௌரவப்படுத்தும் நோக்கில் பல்வேறு சமய, கலாசார மற்றும் நிறுவன நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இவை மனித நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகள் எனின் மிகையல்ல.

ஒக்ரோபர் 05 உலக ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, ஆசிரியரின் தன்மையினைக் கருத்திற்கொண்டு அங்கீகாரமளித்தல் என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறையொன்றுக்காக அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக, இந்த உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாடச் செய்து வருகின்றது.

பொதுவாக ஆசிரியர் என்பவரை மதித்து மரியாதை செய்யும் பண்பாட்டு வழக்காற்றினை ஆசிய நாடுகள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை வெளிப்படுத்தும் விதத்தில் கலாசாரங்களுக்கு ஏற்ப மாற்றங்கள் உள்ளன.

இலங்கையில் சிங்களவரும் தமிழரும் ஆசிரியருக்கு வெற்றிலையைக் கொடுத்து காலில் விழுந்து வணக்கம் செலுத்துவதையும், சீனர்கள் ஆசிரியரின் வினாவுக்கு விடையளிப்ப தாயினும் ஒரு விடயத்தைக் கேட்பதாயினும் இரு கைகளையும் உயர்த்தி எழுந்து நின்று கூறல்– கேட்டல் மேற்கொள்வதையும், மேற்கு நாடுகளின் மாணவர்கள் தாம் அமர்ந்த இடத்தில் இருந்தே கூறல் கேட்டல் செய்வதை எவரும் குறையாகக் கருதாமையும் இக் கலாசார வித்தியாசங்களாகக் குறிக்கலாம்.

இலங்கை உட்பட இன்னும் சில நாடுகள் ஒக்ரோபர் 6 ஆம் திகதி உலக/சர்வதேச ஆசிரியர் தினத்தைக்கொண்டாடுகின்றன. வெவ்வேறு தினங்களில் இத் தினத்தை கொண்டாடும் நாடுகள் பற்றிய சில தகவல்களை நோக்குவோம்:

**இந்தியா:** செப்ரெம்பர் 5 ஆம் திகதி கொண்டாடுவர். இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதி கலாநிதி சர்வபள்ளி ராதாகிருஷ்ணனை கௌரவிக்கும் முகமாகவே அன்னாரது பிறந்த நாளாகிய அத் தினத்தில் ஆசிரியர் தினமும் கொண்டாடப்படுகின்றது.

**சீனா:** 1931 இல் தேசிய மத்திய பல்கலைக் கழகம் ஆசிரியர் தினத்தை ஸ்தாபித்தது. அது சீனாவின் தத்துவஞானி கொன்பியூசின் பிறந்த தினமான ஓகஸ்டு 27 க்கு மாற்றப்பட்டது. தொடர்ந்து நிகழ்ந்த அரசியல் பிறழ்வுகளினால் மீண்டும் அது செப்டம்பர் 10 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது. எனினும் இன்றைய சீனர்களில் பெரும்பான்மையினர் மீளவும் கொன்புயூசியசின் பிறந்த தினத்திற்கு (ஓகஸ்டு 27) கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர்.

**ரஷ்யா:** 1965 முதல் 1994 வரை ஒக்ரோபர் மாதம் முதலாம் ஞாயிற்றுக்கிழமை ஆசிரியர் தினத்தைக் கொண்டாடினர். 1994 இன் பின் உலக ஆசிரியர் தினத்துடன் இணைந்து ஒக்ரோபர் 05 ஆம் திகதி கொண்டாடுகின்றனர்.

**ஐக்கிய அமெரிக்கா:** மே மாதத்தின் முதலாவது வாரத்தின் செவ்வாய்கிழமை இத் தினம் கொண் டாடப்படும். அன்றைய தினம் உத்தியோகப்பற்றற்ற விடுமுறை நாளாகக் கருதப்படும். வாரம் முழுவ தும் கலகலப்பான விழாத்தன்மையான பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**தாய்லாந்து:** ஜனவரி 16 ஆம் திகதியை தாய்லாந்தினர் ஆசிரியர் தினமாகக் கொண்டாடுவர். 1956 ஆம் வருடம் முதல் கொண்டாடப்படும் இத்தினம் பாடசாலை விடுமுறை தினமாகும்.

**ஈரான்:** மே மாதம் 02 ஆம் திகதியாகும். 1980 மே மாதம் 02 ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்ட பன்னூல் ஆசிரியரும், ஓய்வில்லா ஆசானுமாகிய பேராசிரியர் ஆயதொல்லா மொர்தாஸா மொதாஹ்ஹரி அவர்களை நினைவு கூரும் முகமாகவே இத் தினத்தை ஈரானியர்கள் தமது ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகின்றனர். இத் தினத்தில் மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கு மலர் செண்டுகளை வழங்குவர்.

**துருக்கி:** நவம்பர் 24 ஆம் திகதியை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகின்றது துருக்கி. விடுமுறை தினம் அல்ல.

**மலேசியா:** மே 16. அங்கு ஆசிரியர் தினத்தை 'ஹரி குரு' என்ற பெயரிலும் அழைப்பர். நாடு முழுவதும் மிக உற்சாகத்துடன் விமரிசையாகக் கொண்டா டுவர். எனினும் அன்றைய தினம் விடுமுறை நாள் அல்ல.

எனினும் நியூசிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் 'ஆசிரியர் தினத்'தை கொண்டாடுவதில்லை என்ற தகவல் சற்று அசாதாரணமாகவே இருக்கின்றது.

எது எவ்வாறாயினும், நமக்காக தம்மை அர்ப்பணித்தவர்களுக்காக மனதளவிலும் செயலளவிலும் தேசிய ரீதியிலும் கௌரவம் மரியாதை செய்வது அவசியம் செய்யப்பட வேண்டிய நன்றிக்கடனாகும்.

இருந்த போதிலும் தந்தையர் தினம், தாய்மார் தினம் போன்ற தினங்களுக்குக் கிடைத்துள்ள (இலங்கையில் குறைவானாலும்) விளம்பரமும் பிரபல்யமும் ஆசிரியர் தினத்திற்குக் கிடைக்கவில்லை என்பது கவனிப்புக்குரியது. அன்பளிப்பு செய்வதற்கென உற்பத்தி செய்யப்பட்ட விற்பனைப் பொருள்களும் காண்பதற்கு அரிது.

எந்தத் தேசமாயினும், எக் காலப் பிரிவாயினும், எந்த மனித சமூகமாயினும் 'ஆசிரியர்' என்ற பிரிவினர் இரண்டு கருத்துக்கு இடமில்லாமல் மரியாதைக்குரியவர்களே. ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்தைத் தாங்கவிருக்கும் தூண்களுக்கு வைரம் பாய்ச்சுகின்றவர்கள் அவர்கள் தான். எனவே அவர்களை மதித்து மரியாதை செய்து நினைவு கூர்வதற்கு வருடத்தில் ஒரு கணம், 'ஆசிரியர் தினம்' அவசியம்தான் !!

**தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது.**



# கனடாவின் பீல் நகர தலைமை பொலிஸ் அதிகாரியாக பொறுப்பேற்றார் நிஷான்!

மொன்றியல், ஒக். 05

கனடாவின் பீல் நகர தலைமை பொலிஸ் அதிகாரியாக ஈழத்தமிழரான நிஷான் துரையப்பா நேற்றுமுன்தினம் காலை அதிகாரபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

ஹால்டன் பிராந்திய மேலதிக தலைமை பொலிஸ் அதிகாரியாக பணியாற்றிவந்த நிஷான் துரையப்பா தற்போது பீல் நகர தலைமை பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவில் 25 ஆண்டுகள் பொலிஸ் சேவையில் பணியாற்றிய அனுபவம் கொண்டுள்ள நிஷான், குற்ற விசாரணைப் பிரிவின் கீழ், போதைப் பொருள் ஒழிப்பு, துப்பாக்கி குழுக்கள் தொடர்பான விடயங்களைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

இவர், யாழ்ப்பாண நகரின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையாப்பாவின் பேரனாவார். 1975 ஆம் ஆண்டு அல்பிரட் துரையாப்பா படுகொலை செய்யப்பட்ட பின்னர் நிஷான் குடும்பம் கனடாவின் பீல் பிராந்தியத்தில் குடியேறியது. கனடாவுக்கு குடியேறும் போது நிஷான் துரையப்பாவுக்கு 3 வயதாகும்.

நிஷான் துரையப்பா 1995 ஆம் ஆண்டு ஹால்டன் பிராந்திய பொலிஸ் துறையில் சாதாரண காவலராக பணியில் இணைந்தார். தற்போது பீல் பிராந்தியத்தின் தலைமை பொலிஸ் அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார். (ஐ)

# மலையகத்துக்கென தனியான பல்கலை

## சஜித் பிரேமதாஸ உறுதி



கொழும்பு, ஒக். 05

மலையகத்துக்கான தனிப்பல்கலைக் கழகம், கைத்தொழில் பேட்டை, அரச தொழில் வாய்ப்புகள் உட்பட 9 பிரதான தலைப்புகளின் கீழ் முக்கியமான பல கோரிக்கைகளை ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிடம் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியினருக்கும், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பிலுள்ள அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் வதிவிடத்தில் நடைபெற்றது.

மலையக மக்களுக்கான அரசியல் உரிமைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியால் தயாரிக்கப்பட்டிருந்த கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையும் சஜித்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்துக்கான தனி பல்கலைக்கழகம் அமைய வேண்டும்,

தற்போது முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டம் தொடர வேண்டும் என்பதுடன், ஆசிரியர்கள், வேலையில்லாதவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோரும் வீடமைப்பு திட்டத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

தோட்டப்புறங்களை அண்மித்துள்ள நகரங்களில் வாழும் மலையக மக்களுக்கும் வீடுகளை அமைப்பதற்கு நிலவுரிமையையும், கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

கைத்தொழில் பேட்டைகள், 'நைற்றா' போன்ற தொழிற்பயிற்சி நிலையங்களும், தொழில்நுட்ப நிறுவனங்களும் நிர்மாணிக்கப்படுதல் அவசியம்.

ஆசிரியர் சேவைக்கு மட்டுமல்லாமல் அனைத்து அரசதுறைகளுக்கும் மலையக இளைஞர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன், வேலையில்லாப் பிரச்சினைக்கும் தீர்வு அவசியம்.

தேர்தல் மறுசீரமைப்பு இடம்பெற்றாலும் உள்ளாட்சி மன்றம், மாகாணசபை, நாடாளுமன்றம் ஆகியவற்றில் மலையக தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கான இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

– என்பன உட்பட 9 தலைப்புகளின்கீழ் முக்கிய பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, மலையக மக்களுக்காக எனது தந்தை செய்தவையை விடவும் பல சேவைகளை செய்வதற்கு காத்திருக்கிறார் எனவும் குறிப்பிட்டார் என்று சந்திப்பில் கலந்துகொண்டிருந்த மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அ.லோரன்ஸ் தெரிவித்தார்.

அத்துடன், சந்திப்பு திருப்திகரமாக அமைந்திருந்ததாகவும் குறிப்பிட்டார்.

கலாநிதி சந்திரபோஸ், பேராசிரியர் சந்திரசேகரன், பேராசிரியர் விஜேதந்திரன், கல்வியியலாளர் வாமதேவன், மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அ.லோரன்ஸ், ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினர் சண். பிரபாகரன் உட்பட புத்திஜீவிகள் குழுவே இந்த அறிக்கையை தயாரித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி கூடிய தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் குழுவில் அதற்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், பிரதித் தலைவர்களான அமைச்சர் பழனி திகாம்பரம், பிரதி அமைச்சர் கலாநிதி வே. இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், அ.அரவிந்த குமார் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளர் நாயகம் சந்திரா ஸாப்டர், மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சோ.சிறிதரன்ச, எம். உதயகுமார் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# முரசுமோட்டையில் வியாழன் இரவு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு



கிளிநொச்சி, ஒக். 05

கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியானார். நேற்று முன்தினம் இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த முதியவரைக் காட்டு யானை தாக்கியதாகவும் இதனால் சம்பவ இடத்திலேயே அவர் பலியானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த முதியவரின் சடலம் வீட்டின் முன்பாக, வீதியருகே இருந்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# கோட்டை ரயில் நிலையத்துக்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, ஒக். 05

ரயில்வே ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு இடம்பெறும் நிலையில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து சேவையில் ஈடுபடுத்தப்படும் ரயில்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு கோட்டை ரயில் நிலையம் தொடக்கம் காணப்படும் அனைத்து ரயில் நிலையங்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்புக்காக மேலதிக பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# அமெ. மீது சீறும் கோட்டா அணி!

கொழும்பு, ஒக். 05

இலங்கைக்கான அமெரிக்கப் பிரதி தூதுவர் மார்டின் டீ கெலி மற்றும் அரசியல் தலைமை அதிகாரி ஆகியோர் இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானைச் சந்தித்தமை குறித்து மஹிந்த அணி கடும் சீற்றம் அடைந்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க, "அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஆறுமுகன் தொண்டமானைச் சந்தித்துள்ளனர். ஏன் சந்திக்கின்றனர்? ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காகச் சந்திக்கின்றனர். இது அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் அல்ல." எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அதிகளவு வேட்பாளர்களால் இம்முறை ஆணைக்குழுவுக்குப் புதிய பிரச்சினை!

கொழும்பு, ஒக். 05

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவு வேட்பாளர்கள் களமிறங்குகின்றமையால், வாக்களிப்பு நிலையங்களில் இடவசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் தாம் கடுமையான நெருக்கடிகளை சந்திக்கவுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். கடந்த புதன்கிழமை வரை 20 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இது ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் முறையாகும்.

ஒவ்வொரு வேட்பாளரின் சார்பிலும் வாக்களிப்பு நிலையங்களில் இரண்டு முகவர்களை நியமிக்க முடியும்.

இதனால், 20 வேட்பாளர்கள் போட்டியிட்டால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் 40 முகவர்களுக்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

முதலில் வருபவருக்கு முதலில் இடம் என்ற அடிப்படையிலேயே அவர்களுக்கான இடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இடவசதிப் பிரச்சினை இருந்தால் ஏனையவர்களுக்கு வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியிலேயே இடமளிக்க வேண்டிய நிலை ஏற்படும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





# ரக்பி உலகக்கிண்ண தொடர்: அயர்லாந்து அபார வெற்றி!

விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் ரக்பி உலகக்கிண்ண தொடரின் லீக் போட்டியொன்றில், அயர்லாந்து அணி அபார வெற்றிபெற்றுள்ளது.

மிசாக்கி பார்க் மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், அயர்லாந்து அணியும், ரஷ்யா அணியும் களத்தில் முட்டி மோதிக் கொண்டன.

குழு ஏ பிரிவில் நடைபெற்ற போட்டியில், இருஅணிகளும் ஆக்ரோஷமாகக் களத்தில் மல்லுக் கட்டின.

எனினும், களத்தில் ஆதிக்கம் செலுத்திய அயர்லாந்து அணி, 35 – 0 என்ற புள்ளிகளின் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம், அயர்லாந்து அணி, 11 புள்ளிகளுடன் குழு ஏ பிரிவில் முதலிடத்தை பிடித்துள்ளது.

மறுபுறம் தோல்வியடைந்த ரஷ்யா அணி, புள்ளியெதுவும் இல்லாத நிலையில் புள்ளிபட்டியலில், இறுதி இடத்தில் உள்ளது.

# இந்தியாவுக்கு எதிராக களமிறங்கிய தமிழன்

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட்போட்டியில், தென்னாபிரிக்கா அணி சார்பில் தமிழகத்தை பூர்வீகமாகக்கொண்ட வீரர்விளையாடி வருவதால் அவருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

தென்னாபிரிக்கா அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகள்



கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் இருஅணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி கடந்த திங்களன்று ஆரம்பமானது. இதில் தென்னாப்பிரிக்கா அணி சார்பில் ஒரு வீரர் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமாகியுள்ளார். தென்னாபிரிக்க அணி மீண்டும் சர்வதேச கிரிக்கெட்டில் நுழைந்த பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டில் அந்நாட்டுக்காக களமிறங்கும் 101ஆவது வீரர் இவர் ஆவார்.

இவர் பெயர் செனுரன் முத்துசாமி என்று இருப்பதால், இவர் தமிழர் என்று செய்திகள் வெளியானது.

இந்நிலையில் அவரே நான் தமிழன்தான், தமிழகத்தைச் சேர்ந்தவன்தான் என்று ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளார்.

தென்னாபிரிக்கா வீரராக இருக்கும் இவர், துடுப்பாட்டம், பந்துவீச்சு என சகலதுறை வீரராக வலம் வருகிறார். இவர்டர்பனில்பிறந்துள்ளார்.

25 வயதாகும் செனுரனின் குடும்பம் தமிழகத்தில் இருந்து தென்னாப்பிரிக்காவுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே குடியேறி விட்டது.

தென்னாப்பிரிக்காவில் பிறந்து வளர்ந்த செனுரன் முத்துசாமி, தனது பூர்வீகம் சென்னை என்றும், நாகப்பட்டினத்தில் உறவினர்கள் இருக்கின்றனர் எனக்கூறியுள்ளார்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் அதிகம் வாழும் டர்பனில் வசிக்கிறோம். அங்கே எங்களது குடும்பத்தினருடன் கோவிலுக்குச் செல்வது வழக்கம். என்னுடைய குடும்பத்தில் இன் னமும் சிலர் தமிழ் பேசுகிறார்கள். துரதிஷ்டவசமாக எனக்கு தமிழ் பேசத்தெரியாது. ஆனால் மெல்ல மெல்ல தமிழ் மொழியை கற்றுக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

முத்துசாமி பிரதானமாக ஒரு சுழற்பந்து வீச்சாளர். முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் துடுப்பாட்டத்திலும் அசத்தியிருக்கிறார்.

இவர் தனக்கு இலங்கையைச் சேர்ந்த ரங்கன ஹேரத், சங்கக்கார ஆகியோர் மிகவும் பிடிக்கும் என்றுகூறியுள்ளார். முதல்தர கிரிக்கெட்டில் 69 போட்டிகளில் 3403 ஓட்டங்கள் குவித்திருக்கிறார்.

பந்துவீச்சில் 129 விக்கெட்டுகளையும் கைப்பற்றி இருக்கிறார். கடந்த 2017ம் ஆண்டு சிறந்த வீரர்விருதையும்வென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரட்டைச் சதம் அடித்து மயங்க் அகர்வால் அதிரடி

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் மயங்க் அகர்வால் இரட்டை சதம் அடித்து அசத்தியுள்ளார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 20/20, 3 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது.

இதில் 20 ஓவர் தொடர் 1–1என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து, மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதலில் களமிறங்கியது. இதில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ரோஹித் சர்மா, மயன்க் அகர்வால் ஆகியோர் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சை பவுண்டரி, சிக்ஸர்களாக விளாசினர்.

அதிரடியாக விளையாடிய ரோஹித் சர்மா டெஸ்ட் போட்டிகளில் தன்னுடைய 4ஆவது சதத்தை அடித்தார். இரட்டைச் சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 176 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



மறுமுனையில் சிறப்பான விளையாடிய மாயன் அகர்வால் இரட்டைச் சதம் அடித்து தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களுக்கு ஆட்டம் காட்டினார். கடந்த செவ்வாயன்று 116 ஓவர் நிறை வில் இந்திய அணி 3 விக்கெட்டுகளை இழந்து 419 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ரோஹித் சர்மா – மாயன்க் அகர்வால் ஜோடி 317 ஓட்டங்களை அடித்து சாதனை படைத்துள்ளது. தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்கள் அடித்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். முன்னதாக வோக் – டிராவிட் ஜோடி 268 ஓட்டங்களை அடித்திருந்தது.

# அமேசோன் அணிக்கு ஒன்பதாவது வெற்றி!

கரிபியன் பிரீமியர் லீக் ரி – 20 தொடரின் 29ஆவது லீக் போட்டியில், கயனா அமேசோன் வோரியஸ் அணி, 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கயானா மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில், கயனா அமேசோன் வோரியஸ் அணியும், ஜமைக்கா தலாவாஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கயனா அமேசோன் வோரியஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய கயனா அமேசோன் வோரியஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சொயிப் மாலிக் ஆட்டமிழக்காது 73 ஓட்டங்களையும், செர்பேன் ருத்தர்போர்ட் 45 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஜமைக்கா தலாவாஸ் அணியின்பந்துவீச்சில், ஒசேன்தோமஸ். டேர்வல் கிறின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சஹீர் கான் மற்றும் இம்ரான் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து, 157 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குகளமிறங்கியஜமைக்கா தலாவாஸ் அணி, 16.3 ஓவர்கள் நிறைவில், 79 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் கயனா அமேசோன் வோரியஸ் அணி, 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிளென் பிலிப்ஸ் மற்றும் லிடொன் தாஸ் ஆகியோர் தலா 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கயனா அமேசோன் வோரியஸ் அணியின் பந்துவீச்சில், இம்ரான் தஹீர் 3 விக்கெட்டுகளையும், க்குய்ஸ் அஹமட் மற்றும் கீமோ போல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கிறிஸ் கிரின், சந்தர்போல் எம்ராஜ் மற்றும் சொயிப் மாலிக் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, கயனா அமேசோன் வோரியஸ் அணியின் தலைவர் சொயிப் மாலிக் தெரிவு செய்யப்பட்டார்.

நடப்பு தொடரின் புள்ளிபட்டியலை பொறுத்தவரை, இதுவரை விளையாடிய ஒன்பது போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ள கயனா அமேசோன் வோரியஸ் அணி, 18 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

தோல்வியை தழுவிய ஜமைக்கா தலாவாஸ் அணி. 4 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில், ஆறாவது அதாவது இறுதி இடத்தில் உள்ளது.





# சு.க – கோட்டாபய பேச்சில் இணக்கம்

## விரைவில் புரிந்துணர்வு உடன்பாடு

கொழும்பு, ஒக். 05

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு நடந்த நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டது.

இரு தரப்பும் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றை மேற்கொள்ளவுள்ளதாகச் சந்திப்பின் பின்னர் சுதந்திரக் கட்சியின் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

மீரிஹனவிலுள்ள கோட்டாபயவின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. சுதந்திரக் கட்சியின் சார்பில் மஹிந்த அமரவீர, தயாசிறி ஜயசேகர,லசந்த அழகியவண்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரவு 7 மணிக்கு ஆரம்பித்த கலந்துரையாடல் 9 மணிவரை நீடித்தது.

இந்தச் சந்திப்பில் இரு தரப்புக்குமிடையில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன என்பது குறித்து நேற்று முன்தினம் ஆராயப்பட்டது. எனினும், அதில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. எனினும், தொடர்ந்தும் இரு தரப்பும் கலந்துரையாடுவதென முடிவாகியுள்ளது.

இதேவேளை, இன்று சுதந்திரக்கட்சியின் விசேட மத்தியகுழு கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் பெரமுனவை ஆதரிப்பதா என்ற முடிவு எட்டப்படும். தற்போதைய நிலையில், பெரமுனவை ஆதரிக்கும் முடிவையே சு.க எடுக்குமெனத் தெரிகிறது. (ஐ)





## மட்டுவிலில் வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டுக்குழு அட்டகாசம்!



யாழ்ப்பாணம், ஒக். 05

மட்டுவில் சந்திரபுரம் பகுதியிலுள்ளவீடொன்றில்நுழைந்து வாள்வெட்டுக் குழு அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

நேற்று அதிகாலை நுழைந்த நான்கு பேரடங்கிய குழு வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மேட்டார் சைக்கிள் மற்றும் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளது.

இதனையடுத்து வீட்டில் இருந்தவர்கள் கூக்குரல் எழுப்பியதையடுத்து அந்தக் கும்பல் தப்பித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## பெண்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்தவுள்ளாராம் கோட்டாபய

கொழும்பு. ஒக். 05

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானவுடன் பெண்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்தவுள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் கூறினார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிலர் கூறுகின்றனர், எங்களுக்கு உள்ள கட்டில் கடன்களை ரத்துச் செய்து தருமாறு. அது என்னவென்று நான் ஆராய்ந்ததில், கடனை செலுத்தச் சற்று தாமதம் ஆனால் கடன் கொடுத்தவர்கள் வீட்டுக்கு வந்து வீட்டு அறைக்குள் நுழைந்து கடனைச் செலுத்தும் வரையில் கட்டிலில் அமர்ந்துக் கொள்வார்களாம்.

பின்னர், தங்க மாலையை கழற்றிக் கொடுக்கின்றனர். பல பெண்களுக்கு தங்க மாலை இல்லை.

வீட்டின் முதலிடம் பெண்களுக்கு என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தினார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லாமல் வீட்டில் இருந்துவாறு ஏதாவது விதத்தில் வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காகச் சுய வேலை வாய்ப்பை உருவாக்கினார்.

அன்று எமது பெண்களை லட்சுமி என்றார்கள். இன்று அப்படி இல்லை.

நவம்பர் மாதம் 16ஆம் திகதி கோட்டாபய வெற்றிப் பெற்று ஜனாதிபதியான பின்னர், நுண் நிதிக் கடன்கள் ரத்துச் செய்து இந்நாட்டு பெண்களை மீண்டும் லட்சுமியாக ஆக்குவார் – என்றார். (ஐ)

## 1 கிலோ வெடிமருந்து குருநகரில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஒக். 05

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஒரு கிலோ நிறையுடைய வெடிமருந்து பார்சல்கள் நான்கு கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

இந்த தகவலை வடக்கு பிராந்திய கடற்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வெடிமருந்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

எனினும் கடற்படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் வெடிமருந்து பொதிகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை வரை ஒப்படைக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## படைப்பிலக்கியவாதி முருகபூபதியின் 'இலங்கையில் பாரதி' நூல் வெளியீடு

கொழும்பு,ஒக்.05

படைப்பிலக்கியவாதியும் ஊடகவியலாளருமான முருகபூபதி எழுதிய இலங்கையில் பாரதி' (ஆய்வு) நூலின் வெளியீடு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் விநோ தன் மண்டபத்தில் இன்று 05 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

மகாகவிபாரதியின்படைப்பாளுமை பண்புகள் இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம் குறித்து ஆய்வுசெய்யப்பட்ட இந்நூலின் உள்ளடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'காலைக்கதிர்' இதழில் 40 வாரங்கள் தொடராக வெளியானது. அத்துடன் ஆஸ்திரேலியா தமிழ் முரசு இணைய இதழிலும் மறுபிரசுரமானது.

இலங்கையில் பாரதி நூல் வெளியீட்டரங்கு செல்வி பாமினி செல்லத்துரையின் வரவேற்புரையுடன், ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் ஆரம்பமாகும்.

'காலைக்கதிர்' நாளிதழ் ஆசிரியர் வித்தியாதரன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

'ஞானம்' ஆசிரியர் தி.ஞானசேகரன், பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.ஜெயசீலன், எழுத்தாளர் கௌரி அனந்தன், இலக்கிய ஆர்வலர் வானதி ஆறுமுகம் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரையை நிகழ்த் துவர்.




புரவலர் ஹாஸிம் உமர் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

கலை,இலக்கிய ஆர்வலரும் எழுத்தாளருமான உடுவை தில்லைநடராஜா, ஈழத்தின் மூத்த எழுத்தாளர் (அமரர்) இளங்கீரனின் புதல்வர் மீலாத் கீரன், திருமதி ஜெயந்தி விநோதன் ஆகியோர் நூலின் சிறப்பு பிரதிகளை பெற்றுக் கொள்வர். நூலாசிரியர் முருகபூபதி ஏற்புரை நிகழ்த்துவார்.

நிகழ்ச்சியில் இலக்கிய கலந்துரையாடலும் தேநீர் விருந்தும் இடம்பெறும். கலை, இலக்கிய அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

## வெடுக்குநாறி சிவன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக தொல்லியல் திணைக்களம் பொலிஸில் முறையீடு

வவுனியா, ஒக். 05

வவுனியா வடக்கு வெடுக்குநாறி சிவன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராகத் தொல்லியல் திணைக்களம் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் பக்தர்களின் நலன் கருதி ஏணிபடி வைத்தமை தொடர்பாகத் தொல்லியல் திணைக்களம் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆலய நிர்வாகத்தினரை நேற்று மாலை 4.30 மணிக்கு நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டது. (ஐ)

## ஹோட்டல்களுக்கு தாக்குதல் மிரட்டல்

### பொலிஸார் விசாரணை

கொழும்பு, ஒக். 05

கொழும்பில் உள்ள பல ஹோட்டல்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எச்சரிக்கைக் கடிதம் தொடர்பில் பொலிஸ் தலைமையகம் விசேட பிரிவு ஒன்றை அமைத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கையொப்பதுடன் கடந்த இரண்டாம் திகதி கொழும்பில் உள்ள ஹோட்டல்கள் சிலவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வலம் வந்தன.

மீண்டும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று மற்றுமொரு தாக்குதல் நடத்தப்படலாம், ஆகவே ஹோட்டல்களுக்கு வருகை தருவோர் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவின் உறுதிப்படுத்தல் இன்றி இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தக் கடிதம் தொடர்பிலும், கடிதத்தை அனுப்பியவர் தொடர்பிலும், ஏதேனும் இடையூறு விளைவிக்கும் நோக்கத்தில் இந்தக் கடிதம் அனுப்பட்டதா என்பது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
Online Metro News It's Hot
Online Media LANKASRI




தினக்குரல் AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Online Media LANKASRI







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.10.2019 இல் வெளியிடப்பெற்றது.